பல குடும்பங்கள் மீன்பிடித் தொழிலை நம்பியிருக்கின்றன. எப்படி டாக்டர் கலைஞர் அவர்கள் உழவர்களுக்கு இடைத்தரகர்களை நீக்கி, உழவர் சந்தையை ஏற்படுத்தி சகாப்தம் படைத்தாரோ, அதுபோல, மீனவர்களுக்கும் மீனவர் சந்தையை ஏற்படுத்தி மீண்டும் சரித்திரம் படைப்பாரா இந்தச் சரித்திர நாயகன் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மீனவ மக்களுக்காக நல்ல பல திட்டங்களை வாரி, வாரி வழங்கியுள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து மிக நல்ல கருத்தாக இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கலந்தாலோசித்து, நல்ல முறையில் தீர்வு காணலாம்.

முற்பகல் 10—35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 70, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ.பெ. துரைசாமி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

70—

பால் குளிரூட்டும் நிலையம்

*332—**மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) சங்ககிரியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. (ஆ) வினா எழாது.

2006 ஆகஸ்ட் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ.பெ. துரைசாமி.

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்ககிரியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்பட வேண்டியதனுடைய அவசியத்தைக் குறித்து 12–6–2000–ல் இந்தத் துறைக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டிருக்கிறது. இந்தப் பகுதியிலே தினந்தோறும் 65 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தக் குளிரூட்டும் நிலையம் சங்ககிரியில் அமைந்தால் 1 இலட்சம் லிட்டர் பால் அதிகமாக வாய்ப்பு இருக்கிறது. இந்தப் பகுதியில் வாழ்கின்ற வேளாண்மைத் தொழில் செய்யும் மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கை அது என்பதாலும், கிராமப்புறப் பொருளாதாரம் முன்னேற்றம் அடைகின்ற வாய்ப்பை ஏற்படுத்துகின்ற வகையிலும் சங்ககிரியிலே பால் குளிரூட்டும் நிலையம் அமைந்திட அரசு முன்னுரிமை வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகக் குளிரூட்டும் நிலையங்கள் அமைக்கும் திட்டங்களுக்குத் தேசிய பால் வள வாரியம் தற்போது நிதியுதவி வழங்குவதோ அல்லது ஊக்கப்படுத்துவதோ இல்லை. புதிய பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைப்பதற்கு, புதிதாகக் கிராமப்புறங்களிலுள்ள 2 முதல் 5 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மையமாக உள்ள, பால் உற்பத்தி அதிகம் செய்யப்படும் ஒரு சங்கத்தில் பால் குளிர்விப்பான்கள்—bulk milk coolers அமைக்கும் திட்டம் தமிழக அரசு மற்றும் மத்திய அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சங்ககிரியில் பால் சேகரிப்புப் பகுதியில் 5 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுள்ள 12 பால் குளிர்விப்பான்களும், 2 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுள்ள 4 பால் குளிர்விப்பான்களும், ஆக 16 பால் குளிர்விப்பான்கள் அமைந்திட, சேலம் மாவட்டம், கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சேலம் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு முன்னுரிமை வழங்கி, ஏற்கெனவே 2,000 லிட்டர் திறனுள்ள 4 பால் குளிர்விப்பான்கள் 50 சதவிகித மானியத்தில் வழங்கப்பட்டு, தற்போது சோதனை அடிப்படையில் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் தேவையான பால் குளிர்விப்பான்களை சேலம் ஒன்றியத்திற்கு வழங்கி,

TRUTH ALONE TRIUMPHS

[2006 ஆகஸ்ட் 22

சங்ககிரி பகுதியில் பால் குளிர்விப்பான்கள் நிறுவுவதற்கான திட்டம் நடவடிக்கையில் உள்ளது. எனவே, சங்ககிரியில் தனியாகப் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அவசியம் இல்லை என்ற நிலை உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ.பெ. துரைசாமி.

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்ககிரியில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏறத்தாழ 165—க்கு மேலாக உள்ளன. நமது அமைச்சர் அவர்கள், சங்ககிரியைச் சுற்றிப் பல இடங்களில் குளிரூட்டும் மையம் இருப்பதாகச் சொல்கிறார்கள். அதுவும், 8 ஆயிரம் லிட்டர் கொண்ட பகுதிகளுக்குக் குளிரூட்டும் நிலையம் இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால். சங்ககிரியில் தினமும் 65 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுவதால், குளிரூட்டும் மையம் இந்தப் பகுதியிலே அமைந்தால், local sales—உள்ளூரிலே விற்பனை அதிகமாகும்.

அதேபோல, இங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற பால் பரமத்திவேலூருக்கும், சேலத்திற்கும் அனுப்பப்படுகிறது. 15 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட பரமத்திவேலூருக்கு குளிரூட்டும் மையம் ஏற்கெனவே வழங்கி இருக்கின்றார்கள். 65 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட சங்ககிரி பகுதியிலே குளிரூட்டும் நிலையம் இந்த ஆண்டே அமைத்திட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகப் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைப்பதற்கு சாத்தியங்கள் இல்லை. ஆனால், தேவைப்படின், பால் குளிர்விப்பான்கள் அமைப்பதற்குப் பரிசீலனை செய்து, அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]